*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் ~ பன்னாட்டு ஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *VI*, பதிப்பு *17* - ஏப்ரல் - ஜீன் 2019
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நச்சினார்க்கினியரின் உரை மறுப்பு நெறிகள்

**முனைவர் கு. வடிவேல் முருகன்**
உதவிப் பேராசிரியர் - தமிழ்த்துறை
தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரி, சென்னை

***முன்னுரை***

*தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய உரையாசிரியர்களுள் உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர் சிறந்த இலக்கண உரையாசிரியராகவும் பத்துப்பாட்டு, குறுந்தொகை, கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகிய இலக்கியங்களுக்கு உரை எழுதி சிறந்த இலக்கிய உரையாசிரியராகவும் விளங்குகிறார். மு.அருணாச்சலம் இவரை "இலக்கண இலக்கியக் களஞ்சியம்" என்று தன்னுடைய தமிழிலக்கிய வரலாற்றில் குறிப்பிடுகிறார். இளம்பூரணருக்குப் பிறகு தொல்காப்பியம் முழுமைக்கும் உரை செய்தவர் நச்சினார்க்கினியரே ஆவார். இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகிய இரண்டிலும் முழுமையாகவும் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், புறத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், செய்யுளியல் ஆகிய ஆறு இயல்களுக்கும் உரை எழுதியுள்ளார். மேலும் தனக்கு முன்பு எழுதிய உரை நூல்கள் அனைத்தையும் நன்கு பயின்றவர் என்பதற்கு அவருடைய உரையில் பல சான்றுகள் காணப்படுகின்றன.*

**நச்சினார்க்கினியரின் உரைநெறி**

*நச்சினார்க்கினியர் தனக்கு முன் இருந்த உரை நெறியைப் பின்பற்றியும் கொண்டு கூட்டிப் பொருள் கூறியும் இடைச் சொற்களை இடம் மாற்றிப் பொருள் கூறியும் தன்னுடைய உரையை எழுதிச் செல்கிறார். மேலும் செய்யுள் உரைநடைப்படுத்துதல், பழமொழி ஆட்சி, பெயர்க்காரணம் கூறல், அருஞ்சொற்பொருள் சுட்டல், உலகியல், பல்கலைப் புலமையால் கருத்துக்கு அரண் கூறல், மேற்கோள் கூறி நிறுவுதல், உவமை விளக்கல், இலக்கிய இலக்கண வழக்குகளைக் கூறிச் சொற்பொருளைத் தெளிவுபடுத்தல், செயற்கையாகக் கொண்டு கூட்டிப் பொருள்கூறல், இடைச்சொற்களை இடம் மாற்றிக் கூறிப் பொருள் விரித்தல், வைப்புமுறை காட்டல், கதைப் போக்குகளை அறிந்து நயம் சுட்டல் முதலியன நச்சினார்க்கினியரின் உரை நெறிகள் ஆகும். மேலும் நச்சினார்க்கினியர் தம் உரையில் தெளிவும், விளக்கமும் அமையுமாறு எழுதிச் செல்கிறார்.*

**நச்சினார்க்கினியரின் உரை மறுப்பு நெறிகள்**

*நச்சினார்க்கினியர் பிறர் கருத்தை மறுத்துத் தன் கருத்தை நிலை நாட்டுகூதில் வல்லவராக இருக்கிறார். அவ்வகையில் பிற உரையாசிரியர்களை மறுக்கும்போது, 'மாறுகொளக் கூறல் என்னும் குற்றம் தங்கும்' (மொழிமரபு:7,12; குற்றியலுகரப் புணரியல்:3 இடையியல்:33) என்றும்,*

'ஆசிரியர்க்குக் கருத்தன்மை உணர்க' (மொழிமரபு:12) என்றும், 'வடசொல்லென மறுக்க' (மொழி:29,32) என்றும், 'ஆசிரியர்க்கு அங்ஙனம் பொருள் கூறுதல் கருத்தன்மை அறிக' (கிளவி:1) என்றும், 'அவ்வாறு கூறுதல் பொருளன்மை உணர்க' (இடை:32) என்றும் 'போலியுரை' (எச்ச:44) என்றும் 'பொருந்தாதாம், இவர் பிறர் மதமே கூறினார். இஃது ஆசிரியர்க்குக் கருத்தன்மை உணர்க' (எச்ச:54) என்றும், 'இச்சூத்திரத்திற்கு இதுவே பொருள் என்று உணர்க. அச்சூத்திரத்தின் கருத்து அறியாது கூறிற்றாம் (பெயர்:7) என்றும், 'வேறுபாடாம் என மறுக்க' (எச்ச:63) என்றும் 'இதுவே ஆசிரியர் கருத்து' (இடை:41) என்றும் 'ஈண்டுச் சேனாவரையர் கூறிய பொருட்கு விடையின்மை உணர்க' (எச்ச:16) என்றும், 'பொருள் கூறினாரால் உரையாசிரியர் எனின் கூறியது கூறல் ஆம். ஆகலின் அது பொருந்தாது' (எச்ச:59) என்றும் 'தொல்லாசிரியர் தமிழ் வழக்கன்று' (அகத்.53) என்றும் 'பொருந்தாமை உணர்க பொருந்தாதாம்' (எச்சவியல்:44.54.61; களவு:10) என்றும், 'இவற்றை ஆரிடம் என்பார் இவ்விதியறியாதார்' (செய்:72) என்றும், 'தொல்காப்பியனார் கருத்தன்மை உணர்க' (செய்:139) என்றும், 'அவர் அறியாராயிரனார்' (களவு:7,10; கற்பு:46) என்றும் 'இக்கருத்தறியாதால் வெண்பாவியலாற் பண்புற முடிந்த கலியடியுடையதனை வெண்கலிப்பாவாக என்பர்' (செய்149) என்னும் தொடர்களில் மறுத்துரைப்பதைக் காண முடிகிறது.

மேலும் நச்சினார்க்கினியர் பிற உரையாசிரியர்களின் உரையினை மறுக்கும்போது மூன்று வகையான மறுப்பு நெறிகளைப் பின்பற்றுகிறார்.

- உரையை மறுத்தல்
- எடுத்துக்காட்டினை மறுத்தல்
- இலக்கணக் குறிப்பை மறுத்தல்

என்ற மூன்று நிலைகளில் தனது மறுப்பை எழுதிச் செல்கிறார். சேனாவரையர் மறுப்பு எழுதுவதற்கு என்று நான்கு வகையான மறுப்பு நெறியைப் பின்பற்றுகிறார். அந்த வகையில் நச்சினார்க்கினியர் சேனாவரையறைப் பின்பற்றி மூன்று நிலையில் தனது மறுப்பு நெறியை உரையில் பயன்படுத்துகின்றார். மறுக்கும்போது மென்மையாக மறுக்கும் தன்மை உடையவராக இருக்கிறார். ஆனால் எச்சவியலின் 44வது நூற்பாவிற்கு உரை எழுதும்போது இளம்பூரணர் உரையைப் போலியுரை என்று கூறுகிறார். சொல்லதிகாரத்தில் இளம்பூரணரை மறுப்பதோடு மட்டும் அல்லாமல் சேனாவரையரையும் மறுக்கின்றார். பொருளதிகாரத்தில் இளம்பூரணரை மறுத்து, வேறு உரைகாணும் இடங்கள் பல காணப்படுகின்றன.

**நச்சினார்க்கினியரின் மறுப்புகள்**

நச்சினார்க்கினியர் தம் மறுப்புரையைச் சிறப்புப் பாயிரத்திலேயே தொடங்கி விடுகிறார். நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் எனச் சிறப்புப் பாயிரம் கூறுகிறது. இதற்கு, நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் 'நான்மறை' என்றார். அவை தைத்திரியடும் பௌடிகமும் தலவகாரமும் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும் என்பாருமுளர். அது பொருந்தாது. இவர் இந்நூல் செய்த பின்னர் வேத வியாசர் சின்னாட் பல்பிணி சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்' (தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை, சி.கணேசையர் பதிப்பு, பக்.11,12) என்று நச்சினாக்கினியர் விளக்கம் தருகிறார். இவ்கூற்றால் மறுப்புரை மட்டும் அல்லாமல் தொல்காப்பியர் காலம் வேத வியாசர் காலத்திற்கு முந்தியது என்பதையும் அறிய முடிகின்றது.

பொருளதிகாரம் அகத்திணை யியலில் முல்லை, குறிஞ்சி முதலான திணைப் பெயர்கள் யாவும், அந்தந்த நிலத்துக்கு சிறந்த பூக்களால் உண்டான காரணப்பெயர் (அகத்:5) என்று இளம்பூரணர் எடுத்துக்காட்டுடன் விளக்குகின்றார். இக்கருத்தினை நச்சினார்க்கினியர் மறுத்து உரை

கூறுகின்றார். 'இனி இவ்வாறன்றி முல்லை முதலியன பூவாற் பெயர் பெற்றன, இவ்வொழுக்கங்களெனின், அவ்வந்நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றாற் பெயர் கூறலும் உரியவெனக் கடாயினாற்கு விடையின்மை உணர்க' (அகத்:5) என்று மறுத்துரைக்கிறார்.

எச்சவியலின் 53வது நூற்பாவில், 'பெயர்நிலைக் கிளவியின் ஆஅகுநவும்' என்பதற்கு ஒரெழுத்தை நம்பி என்று வழங்குதலையும், ஒரு கிளியை 'நங்கை' என்று வழங்குதலையும் 'மெய்ந்நிலை மயக்கின் ஆஅகுநவும்' என்பதற்குப் பிசிச் செய்யுட்கண் திணை முதலாயின திரிந்து வரும் என்றவாறு' அவை எழுவரிக் கோலத்தார்' எனத் தொடங்கும் பாடலை உதாரணமாக்க் காட்டுவார் சேனாவரையர். இவை எல்லாம்,

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்

ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்

வழக்கினாகிய உயர்சொற் கிளவி

இலக்கண மருங்கின் சொல்லா நல்ல (கிளவி.27)

என்னும் இந்நூற்பாவில் அடங்கும் என்று நச்சினார்க்கினியர் மறுக்கின்றார்.

'இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே' (எச்ச:59) என்னும் நூற்பா உரையில், 'இனி, சேனாவரையர் இடைச்சொல் எல்லாம் விசேடித்து நிற்கும் என்றார் எனின், 'கொன்னூர் துஞ்சினும் (குறுந்.138) கொன்ன கழிந்தன்று இளமையும் (நாலடியார் 55) என்றாற் போல்வன சில இடைச்சொற்கள் விசேடித்தலன்றி, எல்லா இடைச்சொற்களும் விசேடித்து நில்லாமை ஆண்டு அவர் காட்டிய உதாரணங்களை நோக்கி உணர்க' என்று சேனாவரையர் காட்டிய உதாரணங்களை மறுத்துரைக்கின்றார்.

நச்சினார்க்கினியர் உயர்திணைக்கு இலக்கணக் குறிப்பு கூறும் இடத்து, மற்ற உரையாசிரியர்களை மறுத்து உரை கூறுகின்றார். உயர்திணை என்பது இறந்தகால வினைத்தொகை என்று இளம்பூரணர், கல்லாடனார், பழையவுரைகாரர் ஆகியோர் கூறுகின்றனர். ஆனால் தெய்வச் சிலையார் பண்புத்தொகை என்று கூறுகிறார். பண்புத்தொகை என்று கூறும் வழக்கு நச்சினார்க்கினியர் காலத்திலும் இருந்திருக்கின்றது. ஆனால் அதனை விரிவாக ஆராய்ந்து நச்சினார்க்கினியர் இலக்கணக் குறிப்பு கூறியுள்ளார். இதனை 'உயர்திணை' என்பது 'உயர்ந்த ஒழுக்கம்' என இறந்த கால வினைத்தொகை. அஃது ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்தி நின்றது. இதனைப் பண்புத்தொகை என்பாரும் உளர். அது பொருந்தாது என்ன? இது காலந்தோன்றி நிற்றலின் (கிளவி.1) என்று மறுக்கிறார். இங்கு கூறியதோடு அல்லாமல் எச்சவியலின் 20வது நூற்பா உரையில் விரிவாகக் கூறுகிறார். அவ்வுரை வருமாறு:

'உயர்திணை' என்பது வினைத்தொகையோ, பண்புத் தொகையோ எனின் உயர் என்பது முதல் நிலை நின்று, உயர்ந்த திணை என அகர ஈற்றுப் பெயரெச்சமாய் இறந்தகாலம் தொக்கு நிற்றலின், வினைத்தொகையாம். இதற்கு ஏனைக் காலமும் தொகுமாறு அறிக. இதனைப் பண்புத்தொகையாக்கி விரிக்குங்கால், 'கரியதாகிய குதிரை' என விரிந்தாற் போல விரியாது, 'உயர்ந்த்தாகிய திணை என விவரிக்க வேண்டும். அங்ஙனம் விரிந்துழி, அஃது 'உயர்' என்னும் முதல் நிலைப்பின் வந்த தகர அகரம் இறந்தகாலம் உணர்த்தியே நிற்றலின், பண்புத்தொகை ஆகாமை உணர்க. என்ன? பண்பும் வினைக்குறிப்பும் முக்காலமும் புலப்படாமை நிற்கும் என்றே முற்கூறலின் அன்றியும், காலம் புலப்பட நின்றதன் மேல் பண்புகொள் பெயர் விரியாமை உணர்க. என்றும் தெய்வச்சிலையார், 'இஃது எத்தொகையான் வந்தது எனின், பண்புத்தொகையான் வந்தது என்க. மற்றுள்ள பொருள் எல்லாவற்றினும் உயர் பொருளென விசேடித்து நின்றமையின், 'உயர்வானம்' என்றாற்போல வினைத்தொகை ஆகாதோ எனின், 'வினையின் தொகுதி காலத்திலும்' (எச்:18) என்றார். ஆதலின் ஈண்டுக் காலம் தோன்றாமையின் ஆகாது என்க. ஏற்றுக்கு? உயர்ந்த மக்கள், உயரா நின்ற மக்கள், உயரு

மக்கள் என நல்வினை ஏதுவாக மூன்று காலமும் கொண்டலாகுமே எனின், அவ்வாறு கருதுவார்க்கு வினைத்தொகையுமாம் என்று கூறுகிறார். நூற்பா இடம் மாற்றம் செய்த தெய்வச்சிலையார், இந்த இடத்தில் துணிந்து கூறாமல் தடுமாறுகின்றார். பண்புத்தொகை என்பதே தெய்வச்சிலையாரின் கருத்தாக இருக்கிறது என்றாலும் அதனை முடிந்த முடிபாக கூறாமல் செல்லுகிறார். எனவே, தெய்வச்சிலையார் காலம் வரையில் உயர்திணை என்பது பண்புத்தொகை என்று கூறும் நிலை இருந்திருக்கின்றது. இக்கருத்தினை நச்சினார்க்கினியர் மறுத்து வினைத்தொகையே என்று நிறுவுகிறார்.

**முடிவுரை**

இவ்வாறாக நச்சினார்க்கினியர் பிறர் கருத்தை மறுத்தும் தம் கருத்தை நிலைநாட்டுவதில் வல்லவராக இருக்கிறார். பிற உரையாசிரியர்களின் பெயரைக் குறிப்பிட்ட உரை எழுதுவது இவரது வழக்கமாக இருக்கிறது. மென்மையாக மறுக்கும் நச்சினார்க்கினியர் ஒரு சில இடங்களில் வன்மையாகவும் மறுக்கின்றார். மேலும் பல இடங்களில் மற்ற உரையாசிரியரின் உரையை மறுத்து வேறு உரை காணுவதும் நச்சினார்க்கினியரின் உரை மறுப்பு நெறிகளாக அமைகின்றன.

**துணைநூற்பட்டியல்:**


1. தொல்காப்பியம், எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007.
2. தொல்காப்பியம், எழுத்ததிகார மூலமும் இளம்பூரணர் உரையும், கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007
3. தொல்காப்பியம், சொல்லதிகார மூலமும் சேனாவரையர் உரையும், கணேசையர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2007
4. ச.குருசாமி, நச்சினார்க்கினியர் உரைநெறி, இராணி பதிப்பகம், சென்னை, 2008.
5. மு.அருணாச்சலம், தமிழ் இலக்கிய வரலாறு - பதிமூன்றாம் நூற்றாண்டு, பார்க்கர் பதிப்பகம், சென்னை. திருந்திய பதிப்பு, 2005.